# கப்டன் திலகா

குள்ளமான சிறிய உருவம். சிரிக்கும் முகம், அமைதியான சுடாவம். எல்லாருடைய மனங்களையும்கவர்ந்த, பழகுவதற்கு இனிய போராளி. கற்பனை செய்து பாருங்கள். உங்கள் மனதில் ஒரு உருவம் தெரிகிறதல்லவா? நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். அதோ, அந்த உருவம் ஓடுவதைப் பாருங்கள். பாதங்கள் தரையில் படாதது போல் தோன்றுகிறதல்லவா. உடற் பயிற்சி செய்வதைப் பாருங்கள், எப்படி இவ்வளவு வேகமாகவும், லாவகமாகவும் உடலை வளைக்க முடிகிறது என்று உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அவள் தான் திலகா. சிட்டுக் குருவி போல் துருதுருவென்ற இயல்புடன் எப்போதுமே உற்சாகமாகத்தான் ஓடித் திரிவாள். திலகாவிடம் பயிற்சி பெற்ற பெண் புலிகள் 'திலகாக்கா மாத்திரம் எப்படி சோர்வேயில்லாமல் இப்படிச் சுறுசுறுப்பாக இருக்கிறார்?'' என்று ஆச்சரியப்படுவார்கள். '' பயிற்சிப் பாசறையில் நாம் பயிற்சி எடுக்கிறோமா அல்லது திலகாக்கா பயிற்சி எடுக்கிறாரா என்று சந்தேகமாக இருக்கும். ஏனென்றால் அவர் எந்நேரமும் ஓடித் திரிந்து கொண்டே இருப்பார்'' என்று அவர்கள் சொல்வார்கள்.

களத்தில் கூட அவளது உற்சாகம் சிறிதும் குறையவில்லை 1989 ம் ஆண்டின் நடுப்பகுதியில் அமைப்போடு தன்னை இணைத்துக் கொண்ட திலகா இதுவரை காலமும் பயிற்சி கொடுத்து படையணிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால் களம் செல்லும் சந்தர்ப்பம் அவளுக்குக் கிட்டவில்லை. ஆனையிறவு மோதலே அவளது அவாவை நிறைவேற்றியது. வழமை போல் பல உற்சாகமாகவே தன் குழுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு மோதலின் கடைசிக் கட்டம், திலகா தனது அணியுடன் களம் புகுந்தாள். அகிலன் வெட்டையில் நின்ற இராணுவம் ஆனையிறவை நோக்கி முன்னேறத் தொடங்கியது. புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் கடும் மோதல் வெடித்தது. இராணுவம் அங்குலம் அங்குலமாக முன்னேற முயன்றது. இராணுவத்தினரின் நகர்வுகளுக்கு ஏற்ற வகையில் திலகா தனது அணியின் வியூகங்களை மாற்றி - மாற்றியமைத்து போரிட்டுக் கொண்டிருந்



தாள். இராணுவத் தரப்பில் பலரை நாம் வீழ்த்திய போதும் எம் பக்கமும் இழப்புகள் அதிகமாகவே இருந்தது. களத்தில் நிற்கும் எம்மவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனாலும் இராணுவத்தினது நகர்வு தடுக்கப்பட வேண்டும். திலகா உடனேயே தொலைத் தொடர்பு சாதனம் மூலம் தனது குழுவின் அணித் தலைவர்களை அழைத்தாள்.

'' முன்னுக்குப் போங்கோ. சளைக்காமல் அடிபடுங்கோ. வீரமரணமடைந்த ஒவ்வொரு போராளியையும் மனதில நினைச்சுக்கொண்டு போங்கோ - போய் அடிபடுங்கோ,'' என்று திரும்பத் திரும்பச் சொல்லி தன் குழுவை உற்சாகப்படுத்திக் கொண்டு சண்டைக்குத் தலைமை தாங்கினாள். சண்டையும் தீவிரமடைந்தது.

இராணுவத்தினரின் துப்பாக்கி ஒன்றிலிருந்து புறப்பட்ட ரவை திலகாவை துளைத்துச் சென்றது. தரையில் படாமல் பறப்பது போல் ஓடுகின்ற நிருமலை மண் பெற்ற அந்தத் தவப்புதல்வி அந்தப் பெருமணல் வெளியிலே சாய்ந்தாள்.

கப்டன் திலகா

இராசதுரை ரதீஸ்வரி

சேனையூர் - மூதூர்

பிறப்பு:- [illegible]3-05-1970

அரை மயக்கத்திலிருந்த போதும் அவள் வாய், 'செத்த ஒவ்வொரு போராளியையும் நினையுங்கோ. போய் அடிபடுங்கோ'' என்றே கட்டளையிட்டுக் கொண்டிருந்தது.

வைத்தியசாலைக்கு அவள் கொண்டு வரப்படும் வழியிலும் ஏதோ சொல்ல விரும்புவது போல் அவள் வாய் திறந்து, திறந்து மூடியது. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

வைத்தியசாலைக்கு அவள் கொண்டுவரப்பட்ட பின்னர் உயிர்பிரியும் இறுதி நேரத்தில் கூட அவள் வாய் எதையோ முணுமுணுத்தது. நான் நினைக்கிறேன் கடைசி நேரத்தில் கூட, '' செத்த ஒவ்வொரு போராளியையும் நினைச்சுக் கொண்டு அடிபடுக்கோ, '' என்று சொல்லத்தான் அவள் விரும்பியிருப்பாள்.

மலைமகள்

# களத்தில்

## இனப்பற்று

ஆனையிறவுச் சமரில் ஈடுபட்ட பெண் போராளிகளை, கலை பண்பாட்டுக் கழக தலைமையகத்தில் கலைஞர்கள் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சண்டை தொடர்பாக பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கதைத்து முடிந்தபின் - ஒரு நிலையில்

ஒவ்வொரு போராளியாக அவர்களை இயக்கத்துடன் இணையவேண்டும் என்ற எண்ணத்தை விளைவித்த காரணிகளைப்பற்றி கேட்டுக்கொண்டிருந்தார்கள். பெண்போராளிகளும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சூரியா என்றொரு பெண் போராளி, தனது தலையையும், கையையும் அடிக்கடி அசைத்தபடியே

''நான் திருக்கோணமலை குச்சவெளியைச் சேர்ந்தவள். சரி, எனி நான் இயக்கத்திற்கு ஏன் வந்தனான் எனச்சொல்லத் தேவையில்லை, உங்களுக்குத் தெரியும் தானே திருக்கோணமலையில் என்னென்ன நடந்தது'' என்று தனது இடத்தின், இராணுவ அட்டூழியங்களை, இலகுவாக வெளிப்படுத்திவிட்டு இருந்தாள்.

அடுத்ததாக நாதினி என்று அராலியைச் சேர்ந்த பெண் போராளி எழுந்தாள். அராலி யாழ்மாவட்டத்திலுள்ள கிராமம்.

'' நீர் என்னமாதிரி, உமது ஊருக்கு இராணுவம் வந்ததாலா வெளிக்கிட்டனீர் '' என்று நகைச்சுவை உணர்வுடன் ஒருவர் கேட்டார்.

''அராலிக்கு இராணுவம் வந்தாத்தான் இயக்கத்துக்கு வரவேணும் என்று இல்லை. இராணுவம் எங்க வெளிக்கிட்டாலும் அங்கும் தமிழர்கள்தானே இருக்கிறார்கள்''

தனது இனத்தின் மீதான பற்றை எளிமையாக, வெளிப்படுத்திவிட்டு நாதினி சிரித்துக்கொண்டே அமர்ந்தாள்.

## தோழமை

கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலகத்திற்கு கலைஞர்கள் சிலர், ஆனையிறவில் சண்டையிட்ட போராளிகளை சந்தித்து அவர்களின் அனுபவங்களைக் கேட்பதற்காக வந்திருந்தார்கள்.

உரையாடல் நீண்ட நேரம்நடந்தது. குகன் என்று ஒரு போராளி தன் அபாயம் நிறைந்த அனுபவங்களை அழகாகச் சொல்லி முடித்தான், அவனிடம் ''இந்தப்போர் முனையில் உங்களால் மறக்க முடியாத சம்பவம் எதையாவது சொல்ல முடியுமா?'' என்று கலைஞர் தரப்பில் இருந்து ஒருவர் கேட்டார்.

அவன் சிறிது நேரமாக சிந்தித்தபின் சொன்னான் ''பெரிதாக ஒன்றும் இல்லை ஒண்டை சொல்லலாம்.''

''எனக்கு அருகில் - 5 அல்லது 6 யார் தள்ளி - அவ்ரோ போட்டகுண்டொன்று விழுந்தது - ஆனால் வெடிக்கவில்லை'' என்றுவிட்டு நிமிர்ந்தான்.

எல்லோரும் வியப்புடன் சிரித்தார்கள், அப்போ கலைஞர் ஒருவர் ''அது வெடித்திருந்தா இன்று நீர் இதில் நிற்கமாட்டீர்'' என பலமான சிரிப்புடனே சொல்லி முடித்தார்.

''நான் சாகிறது பிரச்சனை இல்லை, என்னோடு ஏழு, எட்டுப் பொடியள் நிண்டவங்கள். அவங்களும் செத்திருப்பாங்கள்''

ஒரு விடுதலைப்புலி தனது உயிரை விட தன் தோழர்களை அளவு கடந்து நேசிப்பதை இலகுவாகச் சொல்லிவிட்டு அமைதியாக அமர்ந்தான்.

## பகிடி

ஆனையிறவு தடைமுகாமின் பின்பக்கமாக இருக்கும் காவல் நிலை ஒன்று - பரந்த வெட்டைக்கு நடுவே இருந்த அந்தக் காவல் நிலையில், வெயிலுக்கும் - வெப்பத்துக்கும் நடுவே போராளிகள் - தாக்குதலுக்கு தயாரான வேலைகளை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் குளிப்பதானால் 3 மைல்கள் பின்னால் வரவேண்டி இருந்தது. அதனால் 10 அல்லை 15 நாட்களாக ஒருவருமே குளிக்கவில்லை.

ஒருநாள் கேசவன் என்று ஒரு தோழன் பொறுப்பாளனிடம் சென்றான்

''பத்துப்பதினைந்து நாளாகக் குளிக்கேலை, இன்றைக்காவது குளிக்க விடுங்கோ'' என்றான்.

''தம்பி, இந்த நேரத்தில குளிக்கவேணும் என்கிறாய் தற்செயலாக இராணுவத்தினர் வெளிக்கிட்டா என்ன செய்யிறது எங்கடநிட்டங்களே தவிடுபொடியாகிவிடும்'' என்றான் பொறுப்பானவன். அவனிடமிருந்து கொஞ்ச நாளாக இந்தப்பதில் தான் வருகிறது. இன்றும் இதைத்தான் சொல்வான் என்பது எல்லோருக்குமே தெரியும்.

குளிக்கக்கேட்ட கேசவன் வேறுபக்கம் திரும்பிக் கொண்டே சொன்னான்.

''இப்ப குளிக்கவிடாதிங்கோ பிறகு செத்தப்பிறகு உடல் மணத்தில மக்கள் அஞ்சலி செய்யவும் பக்கத்தில வராதுகள்'' என்றான். சுற்றி இருந்த தோழர்கள் சிரித்தார்கள். அவனது வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு பக்கத்திலிருந்த ஒரு தோழன் சொன்னான்.

''பரவாயில்லை மச்சான் நீ உப்பளப் பக்கமாகத்தானே இறங்குகிறாய். செத்தாலும் பரவாயில்லை உப்புக்கை பழுதாகாமல் கிடப்பாய், எல்லாம் முடிந்தபிறகு நாங்களே உன்னை எடுத்து அடக்கம் செய்யிறம்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் குளிக்கக்கேட்க வந்த தோழனும் சிரித்துக் கொண்டே தனது வேலைகளைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தான்.

இப்படித்தான் கடினமான சூழலுக்குள்ளும் சிரிப்புடனும் - மகிழ்ச்சியுடனும் அவர்கள் எதிரியைச் சுற்றி நின்றார்கள்.